**செய்தி வெளியீடு எண்: 471** **நாள்: 07.07.2020**

# செய்தி வெளியீடு

## <u>தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் தேர்தலுக்கான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் முத்தவல்லிகளின் இறுதி வாக்காளர் பட்டியல்</u>

தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில் வாக்களிப்போருக்கான தமிழ்நாட்டைச் சார்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் முத்தவல்லிகள் பிரிவுகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டு, **08.07.2020** அன்று வெளியிடப்படுகிறது. இவ்வாக்காளர் பட்டியல் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாமக்கல் கவிஞர் மாளிகை, இரண்டாவது தளம், தலைமைச் செயலகம், சென்னை–**600 009**, முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை–**600001**, அனைத்து மண்டல வக்ஃபு கண்காணிப்பாளர்களின் அலுவலகங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–**9**–ன் அதிகாரப்பூர்வ வலைத்தளம் ஆகியவற்றில் வெளியிடப்படுகிறது.

**2.** தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணை விரைவில் வெளியிடப்படும். தேர்தல் பற்றிய அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் தேர்தல் அதிகாரியால் வெளியிடப்படும்.

தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை– **600 009**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**